# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

*************

முறையீட்டு மனு எண்: 0030/2017/ந

ஆணை எண்: 052/2017

நாள்: 31/03/2017

திரு. க. கருப்பஞானியார்,
கதவு எண்.469A/1, தெற்கு வைத்தியநாதபுரம் தெரு,
இராஜபாளையம்,
விருதுநகர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
இராஜபாளையம் நகராட்சி,
இராஜபாளையம்,
விருதுநகர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

## ஆணை:

முறையீட்டு மனுதாரரின் 17.02.2017 நாளிட்ட முறையீட்டு மனு 20.02.2017 அன்று வரப்பெற்று முறையீட்டு மனு எண் 0030/2017 ஆக இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யப்பட்டது. மேற்படி மனுவில் இராஜபாளையம் நகராட்சியில் வரி விதிப்பு நிர்ணயம் செய்திட நகராட்சிப் பணியாளர்கள் ஊழல் மற்றும் கையூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக புகார்கள் தெரிவிக்கப்பட்டன.

இதுகுறித்து இராஜபாளையம் நகராட்சி ஆணையரது அறிக்கை அனுப்பி வைக்க இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.0030/2017/ந நாள் 21.2.2017ல் உத்தரவிடப்பட்டது. மேலும், 06.04.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு தெரிவித்து

முறையீட்டு மனுதாருக்கு அழைப்பாணை (முறையீட்டு மனு எண்.0030/2017/ந நாள்:02.03.2017) அனுப்பப்பட்டது.

இந்நிலையில் முறையீட்டு மனுதாரர் தனது 01.03.2017 நாளிட்ட கடிதத்தில் 17.02.2017ம் தேதிய தனது புகார் மனுவில் நகராட்சியால் அதிகப்படியான வரி விதிக்கப்பட்ட தீர்வையினை பரிசீலனை செய்ய முறையீட்டு புகார் தெரிவித்ததின் பேரில் மனு பரிசீலனை செய்யப்பட்டு நகராட்சியில் உரிய நிவாரணம் மேற்கொள்ளப்பட்டதால் தனது புகார் மனுவின் மீது மேல் நடவடிக்கை ஏதும் எடுக்க வேண்டாமென கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், இராஜபாளையம் நகராட்சி ஆணையாது அறிக்கை ந.க.எண்.அ1/1662/2017 நாள்: 22.03.2017ல் மனுதாரர் அலுவலக பணியாளர்கள் மீது காழ்ப்புணர்ச்சியால் புகார் அளித்ததாகவும் அவரின் கோரிக்கை நிவர்த்தி செய்யப்பட்டதால் மனுதாரரே தனது புகார் மனுவின் மீது மேல் நடவடிக்கையினை கைவிடுமாறு கோரியுள்ளதால் மேல் நடவடிக்கையினை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, முறையீட்டு மனுதாரரே தனது மனுவை திரும்ப பெற்றுக் கொண்டதால் இம்முறையீட்டு மனு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

இருப்பினும், முறையீட்டு மனுதாரர் இதுபோன்று அலுவலர்கள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை கூறுவது, தனது கோரிக்கை நிறைவேறியதும் தனது புகாரினை திரும்ப பெறுவது போன்ற நடைமுறையினை இனி கடைபிடித்திட வேண்டாமென கடுமையாக எச்சரித்து ஆணையிடப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

7/4/2017

செயலாளர்.

7/4/17

பெறுநர்:

1. திரு. சு. கருப்பஞானியார்,
   கதவு எண்.469A/1,
   தெற்கு வைத்தியநாதபுரம் தெரு,
   இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   இராஜபாளையம் நகராட்சி,
   இராஜபாளையம்,
   விருதுநகர் மாவட்டம்.